**NEWS RELEASE**

UNITED NATIONS HUMAN RIGHTS SPECIAL PROCEDURES
SPECIAL RAPPORTEURS, INDEPENDENT EXPERTS & WORKING GROUPS

# இலங்கை: கடன் பொறிமுறையை தகர்த்தெறிவதற்கு மனித உரிமைகள், ஐ நா நிபுணர்

ஜெனீவா /கொழும்பு (செப்ரம்பர் 11, 2018) – அனைவரையும் உள்ளடக்கக் கூடிய பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கென இலங்கை முன்னெடுக்கும் அனைத்து வழிமுறைகளிலும் மனித உரிமைகள் மையமாக இருந்துவர வேண்டுமென ஐ நா நிபுணர் குறிப்பிடுகின்றார்.

‘‘அதன் பொருளாதார சீர்திருத்தங்கள் மீதும், அதன் உள்கட்டமைப்பு வசதி மீதும் மனித உரிமைகள் எடுத்து வந்திருக்கும் தாக்கம் குறித்த மதிப்பீடு ஒன்றை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்’’ என மனித உரிமைகள் மீது வெளிநாட்டு கடன் எடுத்து வரும் தாக்கங்கள் குறித்த சுயாதீனமான நிபுணரான ஜுவான் பப்லோ போஹோஸ்லாவ்ஸ்கி குறிப்பிட்டுள்ளார். அவர் இலங்கையில் மேற்கொண்ட ஒன்பது நாள் விஜயத்தின் முடிவின் போது வெளியிட்ட அறிக்கையில் இதனை குறிப்பிட்டுள்ளார்.

‘‘சர்வதேச நாணய நிதியத்தினால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளவாறு, அரசாங்கத்தினால் தெரிவு செய்யப்பட்டிருக்கும் உத்தி சர்வதேச கடன்களுக்கு ஊடாக அரசிறை மற்றும் வெளித் துறைகளை பலப்படுத்துவதன் மூலம் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதாகவே இருந்து வந்தது. அது பாரியளவிலான உள்கட்டமைப்பு கருத்திட்டங்களை அபிவிருத்தி செய்வதையும் உள்ளடக்கியிருந்தது. அந்தக் கருத்திட்டங்களில் பெரும்பாலானவை கடந்த கால ஆட்சிகளின் போது துவக்கி வைக்கப்பட்டிருந்தன’’ என திரு. போஹோஸ்லாவ்ஸ்கி கூறினார்.

‘‘இக்கடன்களை திருப்பிச் செலுத்துவது நாட்டின் மிக முக்கியமான செலவினமாக இருந்து வருகின்றது. மேலும் கணிசமான அளவில் பெறப்படும் கடன்கள் இந்நோக்கத்திற்கென ஒதுக்கப்பட்டு வருகின்றன’’ என அவர் மேலும் குறிப்பிட்டார்.

‘‘எவ்வாறிருப்பினும், தீங்குகள் குறைந்த கொள்கைத் தெரிவுகள் இருந்து வருமானால் அதிகரித்து வரும் கடன்களைத் திருப்பிச் செலுத்தும் பொருட்டு சமூக நலச் செலவுகளில் வெட்டுக்களை மேற்கொள்ளக்கூடாது. பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளக்கூடிய ஏனைய தெரிவுகள் இருந்து வருகின்றன. அவை முன்னேற்றகரமான வரிச் சீர்திருத்தங்களுக்கு ஊடாக உள்நாட்டுக் கேள்வியை தூண்டச் செய்தல், சமூக நலன்களை விரிவாக்குதல், குறைந்தபட்ச சம்பளங்களை அதிகரித்தல் மற்றும் எவரும் புறமொதுக்கப்படாதிருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு வருமானங்களை உருவாக்கிக் கொள்வதற்கென கடன் வழங்கியிருப்பவர்களுடன் அக்கடன்கள் தொடர்பான நிபந்தனைகளை மீண்டும் பேசித் தீர்த்துக் கொள்ளல் என்பவற்றையும் உள்ளடக்குகின்றன’’ என்ற விடயத்தை திரு. போஹோஸ்லாவ்ஸ்கி வலியுறுத்தியுள்ளார்.

‘‘அதிகரித்தளவிலான வளங்கள் திரட்டப்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது என்ற விடயம் குறித்து ஒரு கருத்தொற்றுமை நிலவி வருகின்றது. உலகில் இடம்பெற்று வரும் சட்டவிரோதமான நிதிப் பாய்ச்சல்களில் பெரும்பாலானவை தேச எல்லைகளை கடந்து

இடம்பெறும் வரி சம்பந்தப்பட்ட கொடுக்கல்வாங்கல்களாக இருந்து வருகின்றன என மதிப்பீடப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும், வரி ஏய்ப்பு நாட்டில் ஒரு பாரதூரமான குற்றச் செயலாக கருதப்படாதிருப்பதன் காரணமாக, வரி ஏய்ப்பு தொடர்பாக தமது வாடிக்கையாளர்களினால் மேற்கொள்ளப்படும் சந்தேகத்திற்குரிய கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிட வேண்டிய கடமையை வங்கிகள் கொண்டிருக்கவில்லை. இந்த சட்ட ரீதியான இடைவெளியை அகற்ற வேண்டுமென நான் அரசாங்கத்திடம் வலிந்து கேட்டுக்கொள்கிறேன்'' என்கிறார் அந்த நிபுணர்.

2009 ஆம் ஆண்டு போர் முடிவடைந்ததனை அடுத்து கொழும்பு வெளி சுற்றுவட்ட கடுகதிப் பாதை, மின் உற்பத்தி நிலையங்கள், அம்பாந்தோட்டைதுறை முகம் மற்றும் அம்பாந்தோட்டை விமான நிலையம் என்பவற்றையும் உள்ளடக்கிய பாரியளவிலான உள்கட்டமைப்பு கருத்திட்டங்கள் நாடெங்கிலும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

''அத்தகைய உள்கட்டமைப்புக் கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர், அவை மனித உரிமைகள் மீது எடுத்து வரக்கூடிய தாக்கம் குறித்த விரிவான ஒரு மதிப்பீட்டை நடத்த வேண்டும் என்ற கடப்பாட்டை இலங்கையின் சட்டத்தொகுப்பு உள்ளடக்கியிருக்கவில்லை. எனவே, தற்போதைய சர்வதேச மனித உரிமைகள் தர நியமங்களை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கம் வலுவான, அனைத்துமடங்கிய சட்டங்களை நிறைவேற்றி வைக்க வேண்டுமென நான் அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறுகின்றேன்'' எனக் குறிப்பிட்டார் திரு. போஹோஸ்லாவ்ஸ்கி.

''உலகெங்கிலும் பெருந்தொகையான மக்களை வறுமையிலிருந்து மீட்டெடுப்பதற்கு உதவியிருக்கும் நுண்நிதி கடனளிப்பு தொடர்பாகவும் நான் விசேடமாக கவனம் செலுத்தியிருந்தேன். இந்த நுண்நிதி கடனளிப்பு வசதிகள் தமது வாழ்வாதாரங்களை பராமரிப்பதற்கு கடன் பெறுபவர்களுக்கு இயலுமையை வழங்குவதன் மூலம் இதனை மேற்கொண்டு வருகின்றன. எவ்வாறிருப்பினும், கடனளிப்பவர்களினால் மேற்கொள்ளப்படும் துஷ்பிரயோகங்களின் எண்ணிக்கை, அவை அடிக்கடி இடம்பெறும் நிலை மற்றும் அவற்றின் பாரதூரமான இயல்பு என்பவற்றை நான் இலங்கையில் அவதானித்திருப்பதுடன், அரசு இது தொடர்பாக அவசர நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்''.

''பாரிய எண்ணிக்கையிலான கடன் பெறுபவர்கள் இருந்து வரும் அதே வேளையில், வறுமை நிலவும் பிரதேசங்களாகவும், போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களாகவும் இருந்து வரும் பிரதேசங்களைச் சேர்ந்த பெண்கள் குறிப்பாக நுண்நிதி கடனளிப்பு நிறுவனங்களின் இலக்காக இருந்து வருகின்றார்கள் என்ற விடயத்தை நான் அவதானித்துள்ளேன். அந்நிறுவனங்கள் தமது கடன்கள் தொடர்பாக 220 சதவீதம் வரையிலான வட்டி வீதங்களை அறவிட்டு வருவதுடன், கூட்டு வட்டி கணிப்பு முறையை பின்பற்றுகின்றன. இப்பொறிமுறைகள் கடன் வழங்குபவர்களுக்கு பாரியளவிலான இலாபங்களை ஈட்டிக்கொடுக்கும் நோக்கில் வடிவமைக்கப்பட்டிருப்பதுடன், பெருமளவுக்கு வறியவர்களாக இருந்துவரும் பெண் கடனாளிகளின் தோள்களின் மீது ஒரு பாரிய சுமையை சுமத்தியுள்ளன'' என்ற விடயத்தை இந்நிபுணர் வலியுறுத்தியுள்ளார்.

''ஒரே நேரத்தில் பல்வேறு கடனளிப்பு நிறுவனங்களிலிருந்து மூன்று அல்லது நான்கு கடன்களைப் பெற்று அவற்றை நிலுவையில் வைத்திருக்கும் பெண்களை சர்வசாதாரணமாக பார்க்க முடிகின்றது. அதே வேளையில், வேறு சிலர் ஏற்கனவே தாம் பெற்றுக் கொண்டிருக்கும் கடன்கள் தவணை தப்பிய கடன்களாக மாறுவதனை தவிர்த்துக் கொள்வதற்கென மேலும் கடன்களை பெற்றுக்கொள்கின்றார்கள். தமக்குச் சேர வேண்டிய தவணைக் கட்டணங்களைச் சேகரிப்பதற்கென சில சந்தர்ப்பங்களில் நாளாந்த அடிப்படையில் கடன் சேகரிப்பவர்கள் கடனாளிகளின் வீடுகளுக்கு செல்கின்றார்கள். அவ்விதம் செல்லும் ஒரு சிலர் அத்தொகைகள்

திருப்பிச் செலுத்தப்படும் வரையில் அக்குடும்ப வீட்டில் பல மணித்தியாலங்கள் தரித்து நிற்கின்றார்கள்.

''இத்தகைய கடன் சேகரிப்பாளர்களினால் எல்லா சந்தர்ப்பங்களிலும் உளவியல் ரீதியான மற்றும் உடல் ரீதியான அத்துமீறல்களை எதிர்கொள்ளக்கூடிய ஆபத்து நிலையில் பெண்கள் இருந்து வருகின்றனர். ஒரு சில சம்பவங்களில் நிலுவையிலிருந்து வரும் தவணைக் கட்டணங்களுக்கு பதிலாக தமக்கு 'பாலியல் சலுகைகளை' வழங்க வேண்டுமென ஒரு சில கடன் சேகரிப்பாளர்களினால் அவர்கள் நிர்ப்பந்திக்கபட்டிருக்கும் விடயம் எனது கவனத்திற்கு எடுத்து வரப்பட்டிருந்தது. மேலும், கடன்களை திருப்பிச் செலுத்துவதற்கு பணத்தை பெற்றுக்கொள்வதற்கென அவ்விதம் கடன் பெற்றிருக்கும் ஒரு சிலர் தமது சிறுநீரகங்களை விற்பனை செய்வதற்கு முயன்றுள்ள சம்பவங்கள் குறித்தும் நான் அறிந்துள்ளேன்'' என திரு. போஹோஸ்லாவ்ஸ்கி மேலும் குறிப்பிட்டார்.

''இந்த நிறுவனங்கள் தொடர்பாக ஒரு வட்டி வீத உச்சவரம்பை உருவாக்குமாறும், வலுவான கண்டிப்பான ஒழுங்குவிதிகளை நிறைவேற்றி, அவற்றை அமுல் செய்யுமாறும் நான் அரசாங்கத்திடம் வலிந்து கேட்டுக்கொள்கிறேன். நுண்நிதிக் கடனளிப்பு நிறுவனங்கள் கடன் தொடர்பான இடர்நேர்வுகளை எவ்வாறு மதிப்பிடுவது என்பது தொடர்பாக மனித உரிமைகள் தரநியமங்களுடன் பொருந்தக்கூடிய விதத்தில் வழிகாட்டுதல்கள் இருந்து வருதல் வேண்டும். இச்சட்டவாக்கம் நிறைவேற்றப்படும் வரையில், கடனளிப்பு நிறுவனங்களினால் மிகவும் பலவீனமான நிலையில் இருந்து வரும் குழுக்கள் சுரண்டப்படுவதனையும், துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுவதனையும் தடுத்துக்கொள்ளும் பொருட்டு கடன் தவணைக் கட்டணங்களை செலுத்துவதனை நிறுத்தி வைக்கும் ஒரு காலப் பிரிவை பிரகடனம் செய்ய வேண்டுமென நான் அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்கின்றேன்''. என இந்நிபுணர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

சுயாதீன நிபுணர் தனது விஜயம் குறித்த விரிவான அறிக்கையை 2019 மார்ச் மாதத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் சமர்ப்பிக்கவுள்ளார்.

முடிவு

***ஜுவான் பப்லோ போஹோஸ்லாவ்ஸ்கி*** *(ஆஜன்டீனா) 2014 ஆம் ஆண்டு மே மாதம் 08 ஆம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையினால் வெளிநாட்டுக் கடனின் தாக்கங்கள் மற்றும் மனித உரிமைகள் என்பன தொடர்பான சுயாதீன நிபுணராக நியமனம் செய்யப்பட்டார். அவர் அதற்கு முன்னர் வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி என்பவற்றுக்கான ஐ நா மாநாட்டு அமைப்பில் (UNCTAD) இறைமைக் கடன் நிபுணராக பணியாற்றியிருந்தார். அப்பணியின் போது அவர் பொறுப்பு வாய்ந்த இறைமைக் கடனளிப்பு மற்றும் கடன் பெறல் என்பன தொடர்பான நிபுணர் குழு ஒன்றினை ஒருங்கிணைப்புச் செய்தார். அவர் எவையேனும் அரசாங்கம் அல்லது நிறுவனம் என்பவற்றிலிருந்து சுயாதீனமாக செயற்பட்டு வருவதுடன், தனது தனிப்பட்ட பொறுப்பில் இந்தப் பணியை நிறைவேற்றி வருகின்றார்.*

*சுயாதீன நிபுணர்கள் மனித உரிமைகள் பேரவையின் விசேட நடைமுறைகள் என அழைக்கப்படும் அமைப்பின் ஒரு பாகமாக இருந்து வருகின்றனர். ஐ நா மனித உரிமைகள் அமைப்பின் சுயாதீன நிபுணர்களை கொண்ட மிகப் பெரிய தொகுதியான விசேட நடைமுறைகள் என்பது, அப்பேரவையின் சுயாதீனமான விடயங்களைக் கண்டறியும் மற்றும் கண்காணிப்பு பொறிமுறைகளின் ஒரு பொதுப் பெயராக இருந்து வருகின்றது. அது திட்டவட்டமான ஒரு*

*நாட்டில் காணப்படும் நிலைமைகளையோ அல்லது உலகில் அனைத்து பாகங்களிலும் காணப்படும் தொனிப்பொருள் சார்ந்த பிரச்சினைகளையோ கவனத்தில் எடுக்கின்றது. விசேட நடைமுறைகளுடன் சம்பந்தப்பட்ட நிபுணர்கள் தொண்டு அடிப்படையில் பணியாற்றி வருகின்றார்கள். அவர்கள் ஐ நா ஊழியர்களாக இருந்து வரவில்லை. தமது வேலைப் பணிக்கென அவர்கள் சம்பளத்தை பெற்றுக்கொள்வதும் இல்லை. அவர்கள் எவையேனும் அரசாங்கம் அல்லது நிறுவனம் என்பவற்றிலிருந்து சுயாதீனமாக செயற்படுவதுடன், தமது சொந்தப் பொறுப்பில் பணியாற்றி வருகின்றார்கள்.*

***சுயாதீன நிபுணரின் பணிகளை ட்விட்டரில் பார்க்க முடியும்: @IEfinanceHRs***

*மேலும் தகவல்கள் மற்றும் ஊடக வேண்டுகோள்கள் என்பன தொடர்பாக தயவுசெய்து தொடர்பு கொள்ளவும் :*

*ப்ரெடெரிக் போர்க் (+41 22 917 9946) / fbourque@ohchr.org or write to ieforeigndebt@ohchr.org )*

*ஐ நா வின் ஏனைய நிபுணர்கள் தொடர்பான ஊடக விசாரணைகள் தொடர்பாக தயவுசெய்து தொடர்பு கொள்ளவும் : ஜெரமி லோரன்ஸ், ஐ நா மனித உரிமைகள் - ஊடகப் பிரிவு (+41 22 917 9383 / jlaurence@ohchr.org)*

*இந்த ஆண்டான 2018 அகிலம் தழுவிய மனித உரிமைகள் பிரகடனத்தின் **70 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் ஆண்டாகும்**. இந்தப் பிரகடனம் 1948 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி ஐ நா வால் நிறைவேற்றப்பட்டது. அகிலம் தழுவிய பிரகடனம் - ஓர் உலக சாதனையாக 500 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் இப்பிரகடனம் - "அனைத்து மனிதப் பிறவிகளும் சுதந்திரமானவர்களாக பிறந்திருப்பதுடன், கண்ணியம் மற்றும் உரிமைகள் என்பவற்றை பொறுத்தவரையில் சமமானவர்களாக இருந்து வருகின்றார்கள்" என்ற கோட்பாட்டில் வேரூன்றியுள்ளது. அது அனைவருக்கும் தினமும் பொருந்தக் கூடியதாக இருந்து வருகின்றது. அசாதாரணமான செல்வாக்கினைக் கொண்டிருக்கும் இந்த ஆவணத்தின் 70 ஆவது ஆண்டு நிறைவை கௌரவிக்கும் முகமாகவும், அதன் முக்கியமான கோட்பாடுகள் சீர்குலைவதனை தடுத்துக் கொள்ளும் பொருட்டும் உலகெங்கிலும் வாழ்ந்துவரும் மக்களிடம் **மனித உரிமைகளுக்காக குரல் கொடுக்குமாறு** நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்: www.standup4humanrights.org.*

**உங்களுடைய செய்தி இணையதளங்கள் மற்றும் சமூக ஊடகங்களுக்கு:** எமது செய்தி வெளியீடுகள் தொடர்பான பல் ஊடக உள்ளடக்கம் மற்றும் முதன்மையான செய்திகள் என்பவற்றை கீழே பட்டியலிடப்பட்டிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சமூக வலைத்தளங்களிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். தயவு செய்து பொருத்தமான handles ஐ பயன்படுத்தி எம்முடன் இணையவும்:

Twitter: @UNHumanRights
Facebook: unitednationshumanrights
Instagram: unitednationshumanrights
Google+: unitednationshumanrights
Youtube: unohchr